# ஸ்ரீ விஷ்ணு புராணம்

## அவதாரிகை

பகவானின் மூச்சுக் காற்றாகச் சொல்லப்படுகின்ற வேதம், எவர் ஒருவராலும் இயற்றப்படாமலும், அபௌருஷேயமாயும், அக்ஞானமாகிற இருட்டைப் போக்குவதாயும், நமது ஸனாதன தர்மமாகிய மரத்தின் ஆணிவேறாயும், *"ஆதௌ வேதா: ப்ரமாணம்"* என்னும்படி அனைத்திற்கும் மூல ப்ரமாணமாயும் இன்றளவும் விளங்கி வருகின்றது.

ஶப்தராசியான வேதம் மட்டும் இல்லாமலிருந்தால், *"யதி ஶப்தாஹ்வயம் ஜ்யோதி: ஆஸம்ஸாரம் ந தீப்யதே"* என்ற வசனப்படி இந்த பிராகிருத மண்டலமே இருளில் மூழ்கி இருக்கும். அவ்விதம் நடக்கக் கூடாதென்பதற்காகவே எம்பெருமான் வேதத்தையும் அதன் அர்த்த விசேஷங்களையும் பிரமனுக்கு ஆதியில் உபதேஶித்தும், அவ்வேதமானது அஸுரர்களால் அபகரிக்கப்பட்டபொழுது ஹயக்ரீவனாக அவதரித்து அதை மீட்டு பிரமனுக்குத் திரும்பவும் கொடுத்து உதவியதை,

*"முன்னிவ்வுலகேழும் இருள்மண்டியுண்ண*
*முனிவரோடு தானவர் திகைப்ப அன்று*
*பன்னுகலை நால்வேதப் பொருளையெல்லாம்*
*பரிமுகமாய் அருளிய எம் பரமன் காண்மின்"*

என்று நம் கலியன் மிக்க நயம்பட அருளிச் செய்திருக்கிறார்.

வேதத்தில் மறைந்து கிடக்கும் மிக நுட்பமான தத்துவ உண்மைகளை, எவ்விதம் உருப்பெருக்கி (மைக்ராஸ்கோப்) கருவியானது ஒரு நுண்ணிய வஸ்துவை பலமடங்கு பெரிதாக்கிக் காட்டுகின்றதோ, அவ்விதமே நம் ஸ்தூலமான புத்திக்கும் தெரியும்படி இதிஹாஸங்களும் புராணங்களும் மிகத் தெளிவாகக் காட்டுகின்றன. இதிஹாஸமென்பது ஸ்ரீமத் ராமாயணமும் மஹாபாரதமும் ஆகும். *"இதி ஹ ஆஸம்"* (இங்ஙனம் இருந்தது) என்று கூறுவதினால் இவ்விரண்டிற்கும் *இதிஹாஸம்* என்ற பெயர் வந்தது. ஸ்ரீமத் ராமாயணம் இருபத்து நான்காயிரம் ஶ்லோகங்களையும், மஹாபாரதம் ஒரு லக்ஷம் ஶ்லோகங்களையும் கொண்டவை.

புராணமென்பது ஏதோ மிகத் தொன்மையானது, வேண்டாதது, பழையது என்றில்லாமல், *"புரா அபி நவ: இதி புராண:"* அதாவது பழையதினும் பழையதாயினும், எவ்விதம் பழையதான ஸூர்யன் தினந்தோறும் உதித்து இவ்வுலகங்களனைத்திற்கும் என்றும் புதியதைப் போன்று புத்தொளியைக் கொடுக்கின்றானோ அவ்விதம் என்றைக்குமே புதியதாக "நவோ நவோ பவதி" என்று வேதத்தில் கூறப்பட்டதைப் போன்று அப்பொழுதைக்கு அப்பொழுது ஆராவமுதமாக இருக்கின்றது.

இப்படிப்பட்ட புராணங்கள் மொத்தம் பதினெட்டு. இவற்றில் ஸாத்விக புராணங்கள் ஆறு என்றும், ராஜஸ புராணங்கள் ஆறு என்றும், தாமஸ புராணங்கள் ஆறு என்றும் நம்

முன்னோர்கள் கணக்கிட்டிருக்கின்றனர். இப்பதினெண் புராணங்களின் ஶ்லோகங்களின் எண்ணிக்கை நான்கு லக்ஷத்திற்கு மேலானவை. அவை கீழ்வருமாறு:

| வ.எண் | புராணத்தின் பெயர் | ஶ்லோகங்கள் |
|---|---|---|
| 1 | விஷ்ணு புராணம் | 24000 |
| 2 | பாகவத புராணம் | 18000 |
| 3 | நாரதீய புராணம் | 25000 |
| 4 | கருட புராணம் | 19000 |
| 5 | பாத்ம புராணம் | 55000 |
| 6 | வராஹ புராணம் | 24000 |
| 7 | ப்ரம்மாண்ட புராணம் | 12000 |
| 8 | ப்ரம்ம வைவர்த்வ புராணம் | 17000 |
| 9 | மார்க்கண்டேய புராணம் | 9000 |
| 10 | பவிஷ்ய புராணம் | 16000 |
| 11 | வாமன புராணம் | 10000 |
| 12 | ப்ரம்ம புராணம் | 10000 |
| 13 | மத்ஸ்ய புராணம் | 14000 |
| 14 | கூர்ம புராணம் | 17000 |
| 15 | லிங்க புராணம் | 10000 |
| 16 | ஶிவ புராணம் | 24000 |
| 17 | ஸ்காந்த புராணம் | 81000 |
| 18 | அக்னி புராணம் | 15000 |

இவற்றில் வரிசை எண்கள் 1–6 ஸாத்விக புராணங்களென்றும், 7–12 ராஜஸ புராணங்களென்றும், 13–18 தாமஸ புராணங்களென்றும் அழைக்கப்படுகின்றன.

இப்பதினெண் புராணங்களில் ஸ்ரீ விஷ்ணு புராணமும், பாகவத மஹாபுராணமும் மிக உயர்ந்தவையென்று நம் பூர்வர்கள் கருதியதால் அவற்றை பலரும் இன்றளவும் பாராயணம் செய்து வருவதை நாம் காண்கின்றோம். இவ்விரண்டினுள்ளும் ஸ்ரீ விஷ்ணு புராணமே ஶ்ரேஷ்டமானதென நம் பூர்வாசார்யர்களின் அபிப்ராயம். முனிவர்களில் இந்த விஷ்ணு புராணத்தை இயற்றிய **ஸ்ரீ பராஶரரை**, **முநிரத்நம்** என்றும், அவர் இயற்றிய **விஷ்ணு புராணத்தை**, **புராண ரத்நம்** என்றும் சொல்கின்றனர். இக்காரணத்தினாலேயே உலகிலுள்ள அனைத்து ஸ்தோத்ரங்களுக்குள்ளும் ரத்தினமாகத் திகழும் **"ஸ்தோத்ர ரத்னம்"** என்ற ஸ்தோத்ரத்தை இயற்றிய மஹாசார்யரான ஸ்ரீ ஆளவந்தாரும் ஸ்தோத்ரத்தின் நான்காவது ஶ்லோகத்தில்,

***"ஸந்தர்ஶயந் நிரமிமீத புராண–ரத்நம்***
***தஸ்மை நமோ முநிவராய பராஶராய"***

என்று கொண்டாடுகிறார்.

ஸ்ரீ பராசரர் தனது ஸ்ரீ விஷ்ணு புராணத்தில், கலியுகத்தில் பூலோக மக்கள் எவ்விதம் செயல்படுவார்களென்றும், அவர்களின் தர்மம் எப்படிப்பட்டதாகவிருக்கும் என்பதை வர்ணிக்கும் இடத்தில்,

***"கலியுகத்தில் வர்ணாஶ்ரம தர்மங்கள் மிகவும் சீர்குலைந்து பிற ஜாதி மதம் இவற்றை சேர்ந்தவர்களுடன் அதர்மமான முறையிலே திருமணங்கள் நடக்கும். ஆசார்ய–ஶிஷ்ய முறைகள் கெட்டுவிடும். எக்குலத்தவனாகிலும், எவன் மக்களின் மதியை மயக்கத் திறமை உடைய பலசாலியோ (மக்களை மயக்கி தேர்தலில் அவர்களின் ஓட்டைப் பெறுவதே இன்றைய பலம்), அவன் எத்துணை நற்குணங்களற்ற அயோக்கியனானாலும், அவனே அரசுரிமை பெறுவான். வேதமோதி, அத்யாத்ம ஶாஸ்த்ரங்களைக் கசடற கற்ற அந்தணனை ஸ்வாமியாகக் கொள்ளாது, அதர்மமான வழியில் அடையப்பட்ட அதிகமான பொருளை எவன் வைத்திருக்கிறானோ அவனே எல்லோராலும் "ஸ்வாமி" என்று போற்றப்படுவான். கல்வியென்பது பொருள் ஸம்பாதிக்க மட்டுமே பயன்படுமேயொழிய ஆத்ம–ஜ்ஞாநத்தைப் பயனாகக் கொள்ளாது.***

***அதிவ்ருஷ்டியும், அநாவ்ருஷ்டியும் (அதிக மழையினால் வெள்ளமும், மழை இல்லாமையால் பஞ்சமும்) அடிக்கடி நிகழும். அதர்மிஷ்டர்களான ஆட்சியாளர்கள் மக்களின் பரிபாலனத்தை ஒரு பொருட்டாகக் கருதாமல் மக்களின் வரிப்பணத்தை ஊழல், லஞ்சம் போன்ற வழிகளில் கொள்ளை கொள்வர். பிராம்மணர்களுக்கும் அவர்கள் ஓதுகின்ற வேதத்திற்கும் ஹானி உண்டாகும். அகத்தூய்மையை மதிக்காமல் புறத்தூய்மையையே பெரிதாகப் பேசுவர். ஆசார அநுஷ்டானங்களைத் தாங்கள் பின்பற்றாததோடன்றி, அவற்றை பின்பற்றுவோரை மிக்க துன்பத்திற்கும் ஆளாக்குவர்"***

என்று அருளிச் செய்திருப்பதை நினைக்கும்பொழுது, ***"ஆஹா, எவ்வளவு தீர்க்க தரிஶனம்"*** என்று நம் ஒவ்வொருவரையும் வியப்பில் ஆழ்த்தும். இத்தகைய பெருமை வாய்ந்த புராண ரத்னமாகிய விஷ்ணு புராணத்தின் ஆழ்ந்த உட்கருத்துக்களை அதற்கே உரித்தான கதையோட்டத்துடன் எழுத வேண்டுமென்ற அமெரிக்காவில் வாழ்கின்ற பாகவத உத்தமர்களின் ஒருமித்த அபிலாஷையை அடியேன் மூலமாக கார்யகரமாக்க விழைகின்ற ***"வேத தர்ம ஸம்ரக்ஷண ஸபா"*** வின் ஆஜ்ஞையை சிரஶாவஹித்து, சிறிய ஜ்ஞானத்தனான அடியேனின் மந்த மதிக்கு எட்டுகின்ற வகையில் ப்ரதி வாரமும் ஒவ்வொரு அத்யாயம் அத்யாயமாக இனி அநுபவிக்க இருக்கின்றோம் என்பதை எண்ணி பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்த சீரிய லிகித கைங்கர்யம் நிர்விக்நமாக நடந்தேற அஸ்மதாசார்யன் மைசூர் ஈயுண்ணி ஸ்ரீமத் வரதராமானுஜ மஹாதேஶிகன் மற்றும் அடியேனுக்கு உறுதுணையாகவும் வழிகாட்டியாகவும் விளங்கிய பறவாக்கோட்டை ஸ்ரீமதாண்டவன் கோபால தேஶிக மஹாதேஶிகனின் திருவடித் தாமரைகளை மானஸீகமாக வணங்கியும் வழிபட்டும், ஸ்ரீரங்க திவ்ய தம்பதிகளும், பூர்வாசார்ய பாதுகைகளும் அடியேனுக்கு பரிபூர்ண அநுக்ரஹத்தை நல்க வேணுமாய் ப்ரார்த்தித்துக் கொண்டும் இவ்வவதாரிகையை நிறைவு செய்கின்றேன்.

* * * * * *